www.Padasalai.Net www.Trb Tnpsc.com

RAVI MATHS TUITION CENTER , CHENNAI. WHATSAPP – 8056206308

Time : 180 Mins நீட் மாதிரி தேர்வு T4 1 Marks : 800

# NEET MOCK TEST 6/120

1. பின்வரும் மின்தடையின் மதிப்பு என்ன?



a) 100 k Ω b) 10 k Ω c) 1k Ω d) 1000 k Ω

2. (x, y, z)என்ற புள்ளியில் மின்னழுத்தம் $V = -x^2y - xz^3+4$, அப்புள்ளியில் மின்புலம்_______.
a) $\vec{E} = \hat{i}(2xy - z^3) + \hat{j}(xy^2) + \vec{k}(3z^2x)$ b) $\vec{E} = \hat{i}(2xy + z^3) + \hat{j}(x^2) + \vec{k}(3xz^2)$
c) $\vec{E} = \hat{i}(2xy) + \hat{j}(x^2 + y^2) + \vec{k}(3xy - y^2)$ d) $\vec{E} = \hat{i}(z^3) + \hat{j}(xyz) + \hat{k}z^2$

3. ஊடகத்தின் உட்புகுத்திறன் மதிப்பு $4\pi \times 10^{-7}\ Hm^{-1}$ மற்றும் விடுதிறன் $8.85 \times 10^{-12}$ எனில் மின்காந்த அலையின் திசைவேகம்_______.
a) $2 \times 10^8\ ms^{-1}$ b) $3 \times 10^8\ ms^{-1}$ c) $2.25 \times 10^8\ ms^{-1}$ d) $1.5 \times 10^8\ ms^{-1}$

4. கனசதுரம் ஒன்றின் அடர்த்தியானது அதன் நிறை மற்றும் நீளத்தை கொண்டு கணக்கிடப்படுகிறது. நிறை மற்றும் நீளத்தை கொண்டு கணக்கிடப்படுகின்றது. நிறை மற்றும் நீளத்தின் அளவீடுகளின் சதவீதப் பிழைகள் முறையே 4% மற்றும் 3% எனில் அடர்த்தியின் விழுக்காடுப்பிழை _______.
a) 7% b) 9% c) 12% d) 13%

5. ஊடகத்தின் தேவையின்றிப் பரவுவது _______.
a) மின்காந்த அலைகள் b) பருப்பொருள் அலைகள் c) இயந்திரவியல் அலைகள்
d) ஒலி அலைகள்

6. காஸ்மிக் கதிர் பொழிவில் சோடி உருவாக்க _______.
a) எலக்ட்ரான் - புரோட்டான் சோடி b) பாஸிட்ரான் - புரோட்டான் சோடி
c) $\pi$ மெஸான் - $\mu$ மெஸான் சோடி d) எலக்ட்ரான் - பாஸிட்ரான் சோடி

7. ஒரு அலைவுறும் LC சுற்றில் மின்தேக்கியில் உள்ள பெரும மின்னூட்டம் Q ஆகும். ஆற்றலானது மின் மற்றும் காந்தப்புலங்களில் சமமாக சேமிக்கப்படும் மின்னூட்டத்தின் மதிப்பு_______.
a) $\frac{Q}{2}$ b) $\frac{Q}{\sqrt{3}}$ c) $\frac{Q}{\sqrt{2}}$ d) Q

8. காந்தப் பாய அடர்த்திக்கும் (B) காந்தப்புலச் செறிவுக்கும் (H) உள்ள விகிதம்_______.
a) காந்த ஏற்புத்திறன் b) காந்த உட்புகு திறன் c) காந்தமாக்கச் செறிவு
d) இவற்றில் எதுவுமில்லை

9. கீழ்கண்ட தொகுப்புகளில் எது வெவ்வேறு பரிணாமங்களை கொண்டது?
a) அழுத்தம் யங் குணகம் தகைவு
b) மின்னியக்கு விசை, மின்னழுத்த வேறுபாடு, மின்னழுத்தம்
c) வெப்பம், வேலை, ஆற்றல்
d) மின் இருமுனை திருப்புத்திறன், மின்புலப்பாயம், மின்புலம்

10. வெளியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மின்புலம் $\vec{E} = \hat{i} + 2\hat{j} + 3\hat{k}. y - z$ தளத்தின் 50 அலகுகள் பரப்பின் வழியே செல்லும் மின்புலப்பாயம் _______.
a) 175 அலகுகள் b) 117 அலகுகள் c) 28 அலகுகள் d) 50 அலகுகள்

11. பின்வரும் கூற்றுகளில் எது சரி?
a)
அணுக்கரு விசை கருத்துக்களுக்கிடையே தோன்றும் கவர்ச்சி விசை, அது மின்னூட்டச் சார்புள்ளது.
b)
அணுக்கரு விசையின் நெடுக்கம், மின்னூட்ட நிலையில் விசை மற்றும் காந்த விசை மற்றும் காந்த விசை ஆகியவற்றின் நெடுக்கத்தின் அளவே கொண்டது

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

c)
Z > 82 கொண்ட அணுக்கருக்கள் நிலையற்ற தன்மை கொண்டவை α,β,γ கதிர்களை உட்கவர்பவை

d)
அணுக்கரு விசை ஈர்ப்பு விசை அல்ல, ஈர்ப்பு விசையின் மதிப்பு அணுக்கரு விசையின் $10^{-40}$ மடங்கு ஆகும்

12. வெப்ப மின் இரட்டையின் புரட்டு வெப்பநிலை என்பது_______.
a) மாறிலி அல்ல b) திருப்பு வெப்பநிலையைப் போல் இருமடங்காகும் c) மாறிலி
d) திருப்பு வெப்பநிலையில் பாதியாகும்

13. வெவ்வேறு நிறையும் ஒரே ஆரமும் கொண்ட ஒரு வட்டத்தட்டு மற்றும் ஒரு கோளம் ஆகியவை சம உயரமும் நீளமும் உடைய இரு வெவ்வேறான சாய்தளங்களில் சுழல் இயக்கங்கள் மேற்கொள்கின்றன.இரு பொருட்களில் எது முதலில் தளத்தின் அடிப்பாகம் வந்தடையும்?
a) இரண்டும் ஒரே நேரத்தில் வந்து சேரும் b) அவற்றின் நிறைகளைப் பொருத்தது
c) வட்டத்தட்டு d) கோளம்

14. 640 J $kg^{-1}$ $C^{-1}$ தன் வெப்ப ஏற்புத்திறனும் 5 kg நிரையுடைய உலோகத் தின்பொருள் ஒன்று அறை வெப்பநிலை 30° C யிலிருந்து 430° C வெப்பநிலைக்கு வெப்பப்படுத்துகிறது. அந்தத் திண்பொருளை பனிக்கட்டி ஒன்றின் மீது வைத்தால் அதிக பட்சமாக உருகும் பனிக்கட்டியின் அளவு_______. (பனிக்கட்டியின் உருகுதலின் உள்ளுறை வெப்பம் $320 \times 10^3$ J $kg^{-1}$ என்று கொள்க.
a) 2.4 kg b) 5 kg c) 4 kg d) 8 kg

15. நியூட்ரான்கள்_______.
a) நேர் மின்னூட்டத் துகள் b) எதிர் மின்னூட்டத் துகள் c) மின் நடுநிலைத் துகள்
d) மேற்கண்ட எதுவும் இல்லை

16. R மின்தடையும் l நீளமும் கொண்ட ஒரு நேரான கடத்தி, B காந்தப்பாய அடர்த்தி உள்ள ஒரு சீரான காந்தப்புலத்தில் v திசைவேகத்துடன் நகருவதால் தூண்டப்படும் மின்னோட்டம் _______.

a) Blv/R b) BvR/l c) BlR/v d) vlR/B

17. கடத்திகளில் மின்னோட்டத்திற்கு காரணமாய் அமைவது இவைகளின் இயக்கமாகும்_______.
a) எலக்ட்ரான்கள் மற்றும் நேர்மின் துகள்கள்
b) புரோட்டான்கள் மற்றும் எலக்ட்ரான்கள் c) நேர் மற்றும் எதிர் மின் அயனிகள்
d) கட்டுறா எலக்ட்ரான்கள்

18. சுழல் மின்னோட்டத்தை எவ்வாறு குறைக்கலாம்
a) மெல்லியதகடுகளாக b) உலோக கட்டிகளாக c) திரவமாக
d) கம்பிச் சுருளாக

19. $2 \times 10^{-6}$ மீ$^2$ குறுக்கு வெட்டுப்பரப்பு கொண்ட கம்பியில் 3.2A மின்னோட்டம் செல்கிறது. கம்பியில் எலக்ட்ரான்கள் எண்ணிக்கை $10^{28}$ மீ$^{-3}$ எனில் எலக்ட்ரான்களின் இழுப்புத் திசைவேகம்_______.
a) $10^{-2}$ $ms^{-1}$ b) $0.5 \times 10^{-3}$ $ms^{-1}$ c) $10^{-3}$ $ms^{-1}$ d) $0.2 \times 10^{-2}$ $ms^{-1}$

20. பொருளருகு லென்சின் குவிய தூரத்தை அதிகரித்தால் உருப்பெருக்கம் என்ன ஆகும்?
a) நுண்ணோக்கிக்கு அதிகரிக்கும். ஆனால், தொலைநோக்கிக்கு குறையும்
b) நுண்ணோக்கி மற்றும் தொலைநோக்கி ஆகிய இரண்டிற்கும் அதிகரிக்கும்
c) நுண்ணோக்கி மற்றும் தொலைநோக்கி ஆகிய இரண்டிற்கும் குறையும்
d) நுண்ணோக்கிக்கு குறையும் ஆனால், தொலைநோக்கிக்கு அதிகரிக்கும்

21. காற்றில் உள்ள கோளம், திரவமொன்றில் தேய்த்து எடுக்கப்படும் பொழுது மின்தேக்கு திறன் 4 pF லிருந்து 12 pF க்கு அதிகமாகிறது. திரவத்தின் மின்காப்பு மாறிலி_______.
a) 2 b) 3 c) 4 d) 5

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

22. $6\overset{0}{A}$ ஆரமுடைய அணுவில் இரு எலக்ட்ரான்களுக்கு இடையிலான சிறும விசை _______.
a) $2.5 \times 10^{-8} N$ b) $1.6 \times 10^{-10} N$ c) $3.2 \times 10^{-7} N$ d) $5 \times 10^{-9} N$

23. ஒரு AC சுற்றில் எந்த ஒரு கணத்திலும் மின்னியக்கு விசை மற்றும் மின்னோட்டம் முறையே $e = E_m \sin \omega t$, $i = I_m \sin \omega t - \phi$ எனில் சராசரித் திறன் _______.
a) $E_m I_m / 2$ b) $(E_m I_m / 2) \sin \phi$ c) $(E_m I_m / 2) \cos \phi$ d) $E_m I_m$

24. ஆம்பியர் சுற்று விதியோடு தொடர்புடையது_______.
a) கடத்து மின்னோட்டம் b) இடப்பெயர்ச்சி மின்னோட்டம் c) (a) மற்றும் (b)
d) இவற்றில் ஏதுமில்லை

25. இரு துகள்கள் ஒரே அதிர்வெண் மற்றும் ஒரே வீச்சு நேர்கோட்டில் தனிச்சீரிசை இயக்கம் மேற்கொள்கின்றன. அவைகளின் இடப்பெயர்ச்சி, வீச்சின் பாதி தொலைவுக்கு சமமாகும் இடத்தில் அவை ஒவ்வொரு நேரமும் எதிரெதிராக கடந்து செல்கின்றன. அவைகளுக்கு இடையேயான கட்டவேறுபாடு_______.
a) $\frac{2}{3}\pi$ b) $\frac{\pi}{4}$ c) $\frac{\pi}{2}$ d) $\frac{3\pi}{8}$

26. இரு வட்டத் தகடுகள் ஒரே பொருளானது மற்றும் ஒரே நிறையுடையது. அவற்றின் தடிமன்கள் விகிதம் 1:3 எனில் அவற்றின் நிலைமத்திருப்புத் திறன்களின் விகிதம் _______.
a) 3:1 b) 1:3 c) 1:9 d) $1 : \sqrt{3}$

27. பொது ஈர்ப்பியல் விதியை உருவாக்கியவர் _______.
a) நியூட்டன் b) கெப்ளர் c) கோபர்நிகஸ் d) கலிலியோ

28. சீரான வட்ட வடிவத் தட்டின் விட்டத்தின் வழியே செல்லும் அச்சைப் பொருத்து நிலைமத் திருப்புத்திறன் I எனில், தளத்திற்கு செங்குத்தாக விளிம்பின் ஒரு புள்ளி வழியே செல்லும் அச்சைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன் _______.
a) 5I b) 4I c) 6I d) 8I

29. 4 செ.மீ நீளம் கொண்ட ஓர் இரும்புக்கடையியில் 3000 ஆம்பியில் சுற்றுக்கள்/மீ காந்தப்புலத்தைக் கொண்டு $6\pi$ வெபர்/மீ$^2$ காந்தத் தூண்டல் உருவாக்கப்படுகிறது எனில் அக்கட்டையின் காந்த ஏற்புத்திறன்_______.
a) 39996 b) 9999 c) 4999 d) 10001

30. ஒளி ஆண்டு என்பது_____.
a) பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர எடுத்துக் கொள்ளும் கால அவகாசம்
b) சூரியன் ஒரு ஆண்டில் வெளிப்படுத்தும் ஒளியின் அளவு
c) ஒரு ஒளி மூலகம் ஒரு ஆண்டில் வெளிப்படுத்தும் ஒளியின் அளவு
d) ஒளி வெற்றிடத்தின் ஊடே ஒரு ஆண்டில் செல்லக்கூடிய தூரம்

31. தூண்டப்பட்ட மின்னோட்டத்தின் திசை எப்போதும் அது உருவாக காரணமானதை எதிர்க்கும். இது _______.
a) லென்ஸ் விதி b) ஃபாரடே விதி c) கிரிச்சாஃப் விதி d) ப்ளெமிங் விதி

32. மின்தடை வெப்பநிலை எண் எதிர்க்குறியைக் கொண்டுள்ள சில பொருட்கள் _______.
a) கார்பன், எபோனைட் b) தாமிரம் , கார்பன்
c) உலோகக் கலவைகள், மின்கடத்தாப் பொருட்கள் d) மாங்கனின் , ஈயம்

33. நிலைமாறா அலையில் ஊடகம் பல கூறுகளாக அல்லது வளையங்களாகப் பிரிக்கப்படுகின்றன. ஒரே வளையத்திலுள்ள எல்லாத் துகள்களும் அதிரும் போது _______.
a) வெவ்வேறு வீச்சுக்களில் ஒரே கட்டத்தில் அதிரும்
b) ஒரே வீச்சில் ஒரே கட்டத்தில் அதிரும் c) கட்டத்தில் இன்றி ஒரே வீச்சில் அதிரும்
d) இவற்றில் எதுவுமில்லை

34. $\pi/3$ தொடக்க கட்டமும் 25 Hz அதிர்வெண்ணும் 0.05 ம் வீச்சும் உடைய தனிச்சீரிசை இயக்கத் துகளின் சமன்பாடு

a) $y = 0.05 \sin(50\pi t+\pi/3)$ b) $y = 0.05 \cos(50\pi t+\pi/3)$ c) $y = 0.05 \tan(50\pi t+\pi/3)$
d) $y = 0.05 \sec(50\pi t+\pi/3)$

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

35. 0.2 வெபர் /மீ$^2$ காந்தப் பாய அடர்த்தி உள்ள சீரான காந்தப் புலத்திற்கு குத்தாக 0.5 மீ$^2$ பரப்பும் 100 சுற்றுகளும் கொண்ட சுருளின் காந்தப் பாயம்.
a) சுழி b) 0.1 வெபர் c) 1 வெபர் d) 10 வெபர்

36. பொருத்தமற்ற இணையைத் தெரிந்தெடு :
a) ஸ்டீல் யார்டு - கனமற்ற பொருட்களின் எடையை அறிய உதவும் கருவி
b) டோனா மீட்டர் - ஒலியின் ஏற்ற இறக்கங்களை அளக்க உதவும் கருவி
c)
நெஃபோஸ்கோப்- வான்பொருட்களின், (மேகம் உட்பட) வேகத்தை அளவிடும் கருவி
d) கேதோரோ மீட்டர் - வெப்பம் கடத்தும் தன்மையை அளக்கும் கருவி

37. முறையே 4, 8 மைக்ரோ பாரட் மின் தேக்கு திறன் கொண்ட மின் தேக்கிகளுடன் எந்த மின்தேகத்திறன் கொண்ட மின்தேக்கியை தொடர் இணைப்பில் இணைத்தால் தொகுபயன் மின்தேக்குத்திறன் 24/11 மைக்ரோ பாரட் கிடைக்கும்_______.
a) 2 மைக்ரோ பாரட் b) 6 மைக்ரோ பாரட் c) 10 மைக்ரோ பாரட்
d) 12 மைக்ரோ பாரட்

38. பாலின் தரத்தை அளவிடப் பயன்படும் கருவி ____.
a) பாரா மீட்டர் b) லாக்டோ மீட்டர் c) கால்வனோ மீட்டர் d) ஹைகுரோ மீட்டர்

39. ஒரு செய்தித் சைகை பரப்புதலில், 8V உச்ச மதிப்புடைய ஊர்தி அலை ஒன்று பயன்படுத்தப்படுகிறது.பண்பேற்ற எண் 75% ஆக இருக்க வேண்டுமானால் தேவையான பண்பேற்ற செய்யும் சைகையின் உச்ச மதிப்பு _______.
a) 6V b) 8V c) 12V d) 10V

40. அகச்சிவப்பு, மைக்ரோ அலை, புறஊதாக்கதிர் மற்றும் காமா கதிர்வீச்சை இறங்கு வரிசையில் எழுத்து_______.
a) மைக்ரோ அலை, அகச்சிவப்பு, புறஊதா, காமா கதிர்
b) அகச்சிவப்பு, மைக்ரோ அலை, புறஊதா, காமா கதிர்
c) காமா கதிர், புறஊதா, அகச்சிவப்பு, மைக்ரோ அலை
d) மைக்ரோ அலை, காமா கதிர், அகச் சிவப்பு, புறஊதா

41. 1 kg நிறையும் 0.6m விட்டமும் உடைய மெல்லிய உலோக வளையம் ஒன்று, ஒய்வு நிலையிலிருந்து சாய்வுத் தளத்தில் உருண்டோடி வருகிறது. தளத்தின் அடிப்பகுதியை அடையும்போது வளையத்தின் நேர்க்கோட்டுத் திசைவேகம் 5m $s^{-1}$ எனில்,
(i) வளையத்தின் நிலைமத் திருப்புத்திறன் மற்றும்
(ii) சுழற்சியின் இயக்க ஆற்றலைக் கணக்கிடுக.
a) 0.09 kg $m^2$, 12.5J b) 0.9 kg $m^2$, 12.5J c) 0.09 kg $m^2$, 17.5J d) 9 kg $m^2$, 12.5J

42. அரை ஆயுட்காலம் 1.4 x $10^9$ வருடம் கொண்ட X என்ற கதிரியக்க ஐசோடாப்பு சிதைந்து நிலையான Y ஆகிறது. குகை ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட பாறை மாதிரியில் X மற்றும் Y 1:7 என்ற விகிதத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பாறையின் வயது _______.
a) 1.96 x $10^9$ years b) 3.92 x $10^9$ years c) 4.20 x $10^9$ years d) 8.4 x $10^9$ years

43. வீட்ஸ்டன் சமனச்சுற்றின் P,Q,R மற்றும் S என்ற நான்கு புயங்களிலும் முறையே 10$\Omega$, 30$\Omega$, 30$\Omega$ மற்றும் 90$\Omega$ மின்தடைகள் உள்ளன. மின்கலத்தின் மின்னியக்குவிசை மற்றும் அகமின்தடை முறையே 7 வோல்ட் மற்றும் அகமின்தடை முறையே 7

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

வோல்ட் மற்றும் 5Ω கால்வனாமீட்டரின் மின்தடை 50 Ω எனில், மின்கலத்திலிருந்து சென்ற மின்னோட்டம்_______.




a) 1.0 A b) 0.2 A c) 0.1A d) 2.0A

44. A சதுர அலகு பரப்புக்குச் செங்குத்தாகச் செயல்படக் கூடிய காந்தப் பாயம் $\phi$ எனவும், காந்தப்பாய அடர்த்தி B ஒரே சீராக இருப்பதாகவும் கொண்டால்_______.
a) $B = \phi / A$ b) $B = \phi \times A$ c) $B = \phi + A$ d) $B = A/\phi$

45. வெப்பநிலை அதிகரிக்கும்போது நீர்மத்தின் பரப்பு இழுவிசை _______.
a) அதிகரிக்கும் b) குறையும் c) மாறாது
d) கெல்வின் வெப்பநிலை இருமடி அளவுக்கேற்றபடி அதிகரிக்கும்

46. கிடைத்தளத்துடன் $\theta$ மற்றும் (90 - $\theta$) என்ற கோணங்களில் இரு துப்பாக்கிக் குண்டுகள் சம வேகத்தில் சென்றால் அவற்றின் பறக்கும் கால்களின் தகவு ______.
a) 1:1 b) tan $\theta$ : 1 c) 1 : tan $\theta$ d) இவற்றில் எதுவுமில்லை

47. M நிறையும், R ஆரமும் உடைய மெல்லிய வட்ட வளையத்தின் விட்டத்தைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன்
a) $MR^2$ b) $\frac{1}{2}MR^2$ c) $\frac{3}{2}MR^2$ d) $\frac{1}{4}MR^2$

48. மின் மற்றும் காந்த புலன்களின் வீச்சுக்கு இடையேயான தொடர்பு_______.
a) $E_o = B_o$ b) $E_o = cB_o$ c) $E_o = \frac{B_o}{c}$ d) $E_o = \frac{c}{B_o}$

49. மாறா வெப்பநிலையில் கடத்தி ஒன்றின் வழியே பாயும் சீரான மின்னோட்டம் கடத்தியின் முனைக்கு இடைப்பட்ட மின்னழுத்த வேறுபாட்டிற்கு நேரத்தகவில் அமையும் என்று நிரூபித்தவர்_______.
a) ஆம்பியர் b) ஓம் c) வோல்ட் d) ஜூல்

50. ஒரு டிரான்ஸிஸ்டர் சாதாரண முறையில் வேலை செய்ய _______.
a) ஏற்பான் அடிவாய் சந்தி முன்னோக்கு சார்பில் இருக்க வேண்டும்
b) உமிழ்ப்பான் -அடிவாய் சந்தி பின்னோக்கு சார்பில் இருக்க வேண்டும்
c)
ஏற்பான் பொது அடிவாய் மற்றும் உமிழ்ப்பான் அடிவாய் சந்திகள் முன்னோக்கு சார்பில் இருக்க வேண்டும்
d) ஏற்பான் அடிவாய் சந்தி பின்னோக்கு சார்பில் இருக்க வேண்டும்

51. பின்வருவனவற்றை கவனி
I. திரை விளைவு
II. அணுக்கரு சுமை
இவற்றுள் அணு ஆரம் எதைப் பொருத்து அமைகிறது.
a) I b) II c) I, II d) எதுவுமில்லை

52. அவகாட்ரோ எண் மதிப்பை $6.022 \times 10^{23}$ லிருந்து $6.022 \times 10^{20}$ க்கு மாற்றப்படுகிறது. இதனால் மாறுவது_______.
a) சமன் செய்யப்பட்ட சமன்பாட்டில் வேதிக்கூறுகளின் விகிதம்
b) ஒரு சேர்மத்திலுள்ள தனிமங்களின் விகிதம்
c) கிராம்களில் நிறையின் வரையறை d) 1 மோல் கார்பனின் நிறை

53. வினைபடு மூலக்கூறுகளின் எண்ணிக்கை, வினைவிளை மூலக்கூறுகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருந்தால் அந்த சமநிலையின் மீது அழுத்தம் _______.
a) பின்னோக்கு வினையை ஆதரிக்கும் b) முன்னோக்கு வினையை ஆதரிக்கும்
c) எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது d) மேற்கண்ட எதுவுமில்லை

54. $K_4 [FeCN)_6]$ ன் IUPAC பெயர்

WHATSAPP 8056206308 www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

a) பொட்டாசியம் பெர்ரோசயனைடு (ii) b) பொட்டாசியம் பெர்ரோசயனைடு (iii)
c) டெட்ரா பொட்டாசியம் பெர்ரஸ் சயனேட்
d) பொட்டாசியம் ஹெக்சாயனோ பெர்ரேட்

55. தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும் போது கார உலோகங்களின் அடர்த்தி______.
a) அதிகரிக்கிறது b) குறைகிறது c) அதிகமாகிப் பின் குறைகிறது
d) குறைந்து பின் அதிகரிக்கிறது

56. கீழ்க்கண்டவற்றில் ஒலிகோசாக்கரைடு எது?
a) ப்ரக்டோஸ் b) லாக்டோஸ் c) காலக்டோஸ் d) கிளைக்கோஜன்

57. குளோராம்பெனிக்கால் ஒரு /ஓர்
a) கருத்தடை மருந்துப்பொருள் b) எதிர் ஹில்டமின்
c) புரைதடுப்பான் மற்றும் கிருமி நாசினி
d) எதிர் உயிர் அகன்ற வரிசை நிறமாலை

58. அசிட்டோன் மற்றும் அசிட்டோ பீனோனை வேறுபடுத்த கீழ்கண்ட காரணிகளில் எது பயன்படுத்தபடுகிறது?
a) $NH_4Cl$ b) $Na_2SO_4$ c) $NaHSO_3$ d) கிரிக்னார்டு வினைப்பொருள்

59. கீழ்க்காணும் ஹைட்ரைடுகளில் எது நிலையற்றது?
a) $NH_3$ b) $PH_3$ c) $BiH_3$ d) $AsH_3$

60. மன அழுத்தத்தை (Stree) குணப்படுத்த பயன்படும் மருத்துவப்பொருள் வகை
a) வலி நிவாரணிகள் b) புரைத்தடுப்பான்கள் c) எதிர் ஹிஸ்டமின்கள்
d) அமைதிப்படுதிகள்

61. ஹைட்ரஜன் பர் ஆக்ஸைடு எதாக செயல்படாது?
a) ஆக்சிகரணி b) நீரகற்றும் காரணி c) ஆக்சிஜன் ஒடுக்கியாக
d) மேற்கண்ட எதுவுமில்லை

62. பின்வருவனவற்றுள் ஒரு திசையில் நடைபெறும் செயல் முறை எது?
a) வாழைப்பழம் கனிதல் b) வெள்ளி மங்குதல் c) இரும்பு துருப்பிடித்தல்
d) இவை அனைத்தும்

63. நைலான் தயாரிக்கப் பயன்படும் ஓர் மூலப்பொருள்______.
a) எத்திலீன் b) அடிப்பிக் அமிலம் c) பியூட்டா டையீன் d) அசிட்டிலின்

64. $BaO_2$ ஆனது நீர்த்த $H_2SO_4$ உடன் புரிந்து கிடைக்கும் விளை பொருளில், அதிக எலக்ட்ரான் கவர்திறன் உடைய தனிமத்தின் ஆக்ஸிஜனேற்ற நிலைகள்______.
a) 0 மற்றும் 1 b) -1 மற்றும் -2 c) -2 மற்றும் 0 d) -2 மற்றும் +1

65. இயற்கை பலபடிகளின் PDI இதற்கு மிகவும் நெருக்கமாகும்
a) 0 b) 1 c) 10 d) 100

66. $\frac{1}{a}$ என்ற விகிதம் ________ எனப்படுகிறது.
a) மின்கல நீளம் b) மின்கலமாறிலி c) மின்கலப் பரப்பு d) மின்கலத்தடை

67. கீழ்க்கண்டவற்றில் கைரல் மூலக்கூறு
a) 2 - புரோமோ - 2 - மெத்தில் ஹெக்சேன் b) 3 - புரோமோ - 3 - மெத்தில் ஹெக்சேன்
c) 3 - புரோமோ - 2 - மெத்தில் ஹெக்சேன் d) 1 - புரோமோ - 5 - மெத்தில் ஹெக்சேன்

68. சரியான பொருத்தத்தை கண்டுபிடி

| | | | |
|---|---|---|---|
| i | $CH_3$-CH =CH -C(Br)$(CH_3)_2$ | p | வைனைவிக் ஹேலைடு |
| ii | $CH_3$-CH=C(Cl)$CH_2CH_3$ | q | அரைல் ஹேலைடு |
| iii | $(CH_3)_2CHCH_2CH(Br)C_6H_5$ | r | அலைவிக் ஹேலைடு |
| iv | O-Br-$C_6H_4CH(CH_3)CH_2CH_3$ | s | பென்சைலிக் ஹேலைடு |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| a) | r | s | p | q |
| b) | p | q | r | s |
| c) | r | p | s | q |
| d) | q | p | s | r |

69. ஆல்கைனை ஆல்கீனாகக் குறிப்பிட்ட வினைபுரிதல் மோளம் ஹைட்ரஜனேற்றம் செய்யும் போது பயன்படுத்தப்படும் வினைவேக மாற்றி

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com
a) Ni/250$^0$C b) Pt/25$^0$ C c) குயினோலினால் பகுதியாகக் கிளர்வுறச் செய்யப்பட்ட pd d) ரானே நிக்கல்

70. பின்வருவனவற்றுள் நுரை மிதப்பு முறை மூலம் அடர்ப்பிக்கப்படாத தாது எது?
a) காப்பர் பைரைட்ஸ் b) பெண்ட்லான்டைட் c) பைரோலூசைட் d) சிங் பிளாண்ட்

71. கீழ்கண்ட கூற்றுகளில் எது தவறு?
a) s,d மற்றும் f -தொகுதி தனிமங்கள் அனைத்தும் உலோகங்கள்
b) அனைத்து அலோகங்களும் p -தொகுதியில் உள்ளன.
c) அனைத்து தொகுதி 13 தனிமங்களும் உலோகங்கள்
d) தோராயமாக 75% தனிமங்கள் உலோகங்களாகும்.

72. சோடியம் ஹைட்ரஜன் கார்பனேட்டில், கீழ்கண்டவற்றில் எது கரையாது?
a) O -நைட்ரோ பீனால் b) பென்சீன் சல்போனிக் அமிலம்
c) 2, 4, 6-ட்ரை நைட்ரோ பீனால் d) பென்சாயிக் அமிலம்

73. பென்சால்டிஹைடைக் குறுக்கு வினையால் சின்னமிக் அமிலமாக மாற்றும் வினையின் பெயர்
a) இணைப்பு வினை b) நவநகல் வினை c) ஷாட்டான் - பௌமான் வினை
d) ஹெக்சாமெத்திலின் டெட்ரமீன்

74. ஆல்கஹாலுடன் எதைக் கலந்து பெட்ரோலுக்குப் பதில் பயன்படுத்துகிறார்கள்
a) ஈதர் b) கீட்டோன் c) அமிலம் d) ஆல்டிஹைடு

75. குளுக்கோஸ் ஓர்/ஒரு
a) பாலிஹைடிராக்ஸி கீட்டோன் b) ஆல்கஹால் c) கார்பனின் ஹைடிரேட்
d) பென்டா ஹைட்ராக்ஸி ஆல்டிஹைடு

76. ஒரு வினையின் வேகத்தை அதிகரிக்கப் பயன்படும் வினைவேக மாற்றியின் பெயர்
a) உயர்த்திகள் b) தளர்வு வினைவேக மாற்றி c) ஊக்க வினைவேக மாற்றி
d) வினைவேக மாற்றி நச்சு

77. கனசதுர படிவ வடிவில் (விளிம்பின் நீளம் : 'a') படிகமாகும் ஒரு பொருளின் (மோலார் நிறை : M) எனில் அதன் அடர்த்தி ($\rho$) வை இவ்வாறு குறிப்பிடலாம்.
a) $\rho = \frac{Z}{a^3}(\frac{M}{N_A})$ b) $\rho = \frac{a^3}{Z}(\frac{M}{N_A})$ c) $\rho = \frac{a^3}{Z}(\frac{N_A}{M})$ d) $\rho = \frac{a^3}{6}(\frac{M}{N_A})$

78. வேகமாறிலி இதனைப் பொறுத்தது அல்ல.
a) வெப்ப நிலை b) கிளர்வுறு மாறிலி c) வினைவேக மாறிலி
d) வினைபுரியும் உறுப்புகளின் செறிவு

79. 298K, $Zn|ZnSO_4(0.01M)||CuSO_4(1.0M)|$ என்ற டேனியல் மின்கலத்தின் மின்னியக்கு விசை, $E_1$. ஆகும். $ZnSO_4$ ன் செறிவு 1.0 M மற்றும் $CuSO_4$ ன் செறிவு 0.01 M எனில் மின்னியக்கு விசை $E_2$. ஆகும். $E_1$ மற்றும் $E_2$ இடையே தொடர்பு யாது?
a) $E_1= E_2$ b) $E_1> E_2$ c) $E_1 < E_2$ d) $E_2 = 0 \neq E_1$

80. கீழ்க்கண்டவற்றில், பூச்சிக்கொல்லியாக பயன்படும் இயற்கை வேதிப்பொருள்
a) DDT b) ஆல்டுரின் c) டையெல்டுரின் d) நிக்கோடின்

81. பொருள் மைய கனசதுர அலகு செல்லில், அனுவின் ஆரத்திற்கும் (r), அலகு செல்லின் விளிம்பு நீளத்திற்கும் (a) இடையேயான தொடர்பு ______.
a) $r = \frac{a}{2}$ b) $r = \frac{a}{2\sqrt{2}}$ c) $r = \frac{\sqrt{3}}{4}a$ d) $r = \sqrt{2/a}$

82. 2,3 பெண்டாடையீனில் (2,3 pentadiene) வலமிருந்து இடமாக உள்ள ஐந்து கார்பன் அணுக்களின் இனக்கலப்பு வகைகள்_______.
a) $sp^3, sp^2, sp, sp^2, sp^3$ b) $sp^3, sp, sp, sp, sp^3$ c) $sp^2, sp, sp^2, sp^2, sp^3$ d) $sp^3, sp^3, sp^2, sp^3, sp^3$

83. மீத்தேன் மூலக்கூறில் உள்ள கார்பன் எவ்வகை இனக்கலப்பினை ஏற்படுத்தும்?
a) sp கலப்பினம் b) $sp^2$ கலப்பினம் c) $sp^3$ கலப்பினம் d) மேற்கண்ட எதுவுமில்லை

84. சீசன் இதற்கு உதாரணம்
a) நியூக்ளியோ புரதம் b) பாஸ்போ புரதம் c) கிளைக்கோ புரதம்
d) குரோமோ புரதம்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

85. அணு எண் 29 உள்ள தனிமத்தின் எலெக்ட்ரான் அமைப்பு
a) $[Ar]4s^2 3d^9$ b) $[Kr]4s^2 3d^9$ c) $[Ar]4s^1 3d^{10}$ d) $[Ar]4s^3 3d^8$

86. டியூட்ரியம் உட்கருவில் இருப்பவை______.
a) 2 புரோட்டான் மட்டும் b) ஒரு நியூட்ரான்
c) ஒரு புரோட்டானும் ஒரு நியூட்ரானும் d) 2 புரோட்டான்களும் ஒரு நியூட்ரானும்

87. ஒரு வாயுக்கலவையில் 1:4 என்ற விகிதத்தில் முறையே $H_2$ மற்றும் $O_2$ கலந்துள்ளது எனில் அக்கலவையின் இவ்வாயுக்களில் மோலார்விகிதம் என்ன?
a) 4:1 b) 16:1 c) 2:1 d) 1:4

88. கியூமின் முறையின் உபபொருள்________.
a) எத்தனால் b) எத்தனேல் c) புரோப்பனோன் d) சைக்ளோ ஹெக்சனோன்

89. 5 லிட்டர் குடுவையில் 320 கிராம் ஆக்ஸிஜன் வாயு இருந்தால், அதன் மோலார் செறிவு யாது?
a) 54 மோல்/லிட்டர் b) 2 மோல்/லிட்டர் c) 4 மோல்/லிட்டர் d) 6 மோல்/லிட்டர்

90. இதனுடன் வினைபுரியும் போது $H_2O_2$ ஒடுக்கும் காரணியாக செயல்படுகிறது.
a) $FeCl_2$ b) $Na_2SO_3$ c) $K_2Cr_2O_2$ d) $KMnO_4$

91. அரை வெப்ப நிலையில் $N_2(g) + O_2(g) \rightleftharpoons 2NO(g)$ என்ற வினையின் சமநிலை மாறிலி $4 \times 10^{-4}$ அதே வெப்பநிலையில் $NO(g) \rightleftharpoons \frac{1}{2}N_2(g) + \frac{1}{2}O_2(g) K_C$ மதிப்பு_______.
a) 25 b) 50 c) 75 d) 100

92. ஐந்தாவது ஆற்றல் மட்டத்தில் இடம்பெறும் அதிகபட்ச எலக்ட்ரான்கள்______.
a) 90 b) 45 c) 50 d) 62

93. கீழ்க்கண்டவற்றில் எந்த ஒன்று $C_8H_{14}$ன் மாற்று அல்ல?
a) 4-எத்தில்-1-ஹெக்ஸைன் b) ஈத்தைனைல் சைக்ளோஹெக்சேன்
c) 2,5-டைமெத்தில்-3-ஹெக்ஸைன் d) 1-ஆக்டைன்

94. சரியற்ற கூற்றை தேர்ந்தெடு
a) நைலான் ஒரு படி-வளர்ச்சி குறுக்குப் பலபடி
b) ஆரவகை பலபடியாதல் பொதுவாக 'ஏடேக்டிக்' பல்படியைத் தருகிறது
c) இயற்கை ரப்பர் ஒரு ட்ரான்ஸ்-பாலி ஐசோபிரீன்
d) கூட்டா - பெர்ச்சா ஒரு டிரான்ஸ்-பாலி ஐஸோபீரின்

95. உயிர் எதிரினியாகப் பயன்படும் கரிம ஹாலஜன் சேர்மம் எது?
a) $CHI_3$ b) $CH_3I$ c) $CaCl_2$ d) $CHCl_3$

96. ஆக்டினைடு தனிமங்கள் லாந்தனைடு தனிமங்களின் பண்புகளுடன் ஒத்துப்போகின்றன என்பதே சோதனை மூலம் நிரூபித்துக் காட்டியவர்______.
a) லவாய்சியர் b) சீபார்க் c) டாபரீனர் d) டி-சான்கோர்டாய்ஸ்

97. ஒரு கதிர் வீச்சின் ஆற்றல் மற்றும் அதன் அதிர்வெண் இடையேயான தொடர்பு ______.
a) டி-பிராக்ளே b) ஐன்ஸ்டீன் c) பிளாங்க் d) போர்

98. கார்பனின் சுய சகப்பிணைப்பு உண்டாக்கும் திறன்______.
a) 85 b) 55 c) 35 d) 45

99. அணுக்கரு உலைகளில் கனநீர்($D_2O$) இவ்வாறாக பயன்படுகிறது
a) $\alpha$-துகள் மூலம் b) நியூட்ரான் மூலம் c) அணு உலைகளில் வெப்பம் கடத்தி
d) நியூட்ரானின் வேகத்தை குறைக்கிறது

100. இரு வேறுபட்ட $T_1$ மற்றும் $T_2$ வெப்ப நிலைகளில் ஒரு வேதி வினையின், கிளர்வுறு ஆற்றல் Ea மற்றும் வேக மாறிலிகள் $k_1$மற்றும் $k_2$ ஆகியவற்றை இவ்வாறு தொடர்புபடுத்தலாம்.
a) $ln\frac{K_2}{K_1} = -\frac{Ea}{R}\left[\frac{1}{T_1} - \frac{1}{T_2}\right]$ b) $ln\frac{K_2}{K_1} = -\frac{Ea}{R}\left[\frac{1}{T_2} - \frac{1}{T_1}\right]$ c) $ln\frac{K_2}{K_1} = -\frac{Ea}{R}\left[\frac{1}{T_2} + \frac{1}{T_1}\right]$
d) $ln\frac{K_2}{K_1} = \frac{Ea}{R}\left[\frac{1}{T_1} - \frac{1}{T_2}\right]$

101. ஆர்க்கிகோணியம் இந்த செல்களில் உருவாகிறது

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

a) தாலஸின் மேல்புறச் செல் b) தாலஸின் கீழ்புறச் செல் c) வேரிகள்
d) கழுத்துக்கால்வாயச் செல்கள்

102. கீழ்க்கண்டவற்றுள் மாற்றுரு அல்லாதது எது?
a) வெள்ளரியின் பற்றுக் கம்பிகள் b) சப்பாத்திக்கள்ளியின் தட்டையான பாகம்
c) நெப்பந்தசின் குடுவை d) எலுமிச்சையின் முட்கள்

103. சிவப்பு தசைநார்கள் அதிகமாக காணப்படுமிடம்
a) கோல்கை உறுப்புகள் b) மைட்டோகாணட்ரீயா c) ரைபோசோம்கள்
d) லைசோசோம்

104. ஃபேபேஸி குடும்பத்தைச் சேர்ந்த நீர்த்தாவரம்
a) குரொட்டலேரியா பர்ஹியா b) கிளிட்டோரிய டெர்னிஷியா
c) பைசம் சட்டைவம் d) அஸ்கினோமீன் ஆஸ்பெரா

105. கீழ்கண்ட எந்த திசு கிரித் உயர உதவுகிறது?
a) இடை ஆக்கு திசுக்கள் b) பக்க ஆக்கு திசுக்கள் c) நுனி ஆக்கு திசுக்கள்
d) எதுவுமில்லை

106. கரகரப்பான எண்டோ பிளாச வலைப்பின்னலில் ஒட்டியபடி காணப்படுவது
a) மைட்டோகாண்டிரியா b) பசுங்கணிகம் c) ரிபோசோம் d) வாக்குவோல்

107. இரத்தம் உறைதலுக்குப் பயன்படும் புரோட்டீன்
a) அல்புமின் b) α-குளோபுலின்கள் c) ஃபைப்ரினோஜன் d) γ-குளோபுலின்கள்

108. மீன்களில் பக்க கோடு உணர்ச்சி உறுப்புகள் என்பது
a) நுகர் உணர்வு b) சுவை உணர்வு c) உருமாற்ற உணர்வு d) இரசாயன உணர்வு

109. மலராத தன் மகிர்ந்த சேர்க்கை (தற்கருவுறுதல்) யினால் ஏற்படும் மேன்மை பின்வருமாறு
a) அதிக அளவு மரபிய வேறுபடுந்திறன் b) அதிகச் சதியுடைய சந்ததி
c)
பூந்துகள் மற்றும் மகரந்தத்தூள் சேர்ப்பிணைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை
d) விவிபேரி தன்மை

110. கீழ்க்கண்டவற்றுள் சரியாக இணைக்கப்படாதது எது?
a) அப்சிசிக் அமிலம்-இலைத்துளை மூடுதல் b) ஜிப்ரலிக் அமிலம் -இலையுதிர்தல்
c) சைட்டோகைனின்-செல்பகுப்பதல் d) IAA-செல்சுவர் நீட்சியடைதல்

111. பயோலிஸ்டிக் முறை பயன்படுத்தப்படுவது
a) கடத்தியை குளோனிங் செய்
b) அயல் DNA வை பிளாஸ்மிடுவின் உள்ளே செலுத்த
c) ஓம்புயிரி செல்களினுள் அயல் DNA வை செலுத்த d) டிரான்ஸ்பர்மேசன்

112. காற்றில்லா சுவாசத்தின் போது பைரூலிக் அமிலம் ஈதைல் ஆல்கஹால் அல்லது லாக்டிக் அமிலமாக மாறுகிறது. இவ்வினையின் பெயர்
a) கிளைக்காலிசிஸ் b) நொதித்தல் c) கிரப்ஸ் சுழற்சி
d) ஆக்ஸிஜனேற்ற பாஸ்பேட் சேர்ப்பு

113. சூழல் மண்டலம் என்ற சொல்லை உருவாக்கியவர்
a) E.P.ஓடம் b) A.ஸ்டான்லி c) லின்டர்மேன் d) எல்டன்

114. கீழ்க்கண்டவற்றுள் எது U வடிவ ரீனல் குழல்?
a) அண்மை சுரண்டை குழல் b) ஹென்லிஸ் வளைவு c) சேய்மை சுருண்ட குழல்
d) சேகரிக்கும் குழல்

115. $NH_4+O_2$
a) $O_2$ b) $H_2O$ c) $CO_2$ d) $N_2$

116. நுண்குழல்கள் அங்கமாகக் காணப்படுவது
a) சென்ட்ரியோல்கள், கதிர் இழைகள் மற்றும் குரோமாடின்
b) சென்ட்ரோசோம், நியூக்ளியோசோம் மற்றும் சென்ட்ரியோல்கள்
c) சிலியா, கசையிழை மற்றும் பெராக்சிசோம்கள்
d) கதிர் இழைகள், சென்ட்ரியோல்கள் மற்றும் சிலியா

Kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
WHATSAPP 8098...

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

117. சரியான கூற்றை கண்டறிக
(I) ஹீமோபிலியா என்பன பாலின -இணைவு நோய்
(II) அனுபிளாய்டியால் டவுன் சின்டரோம் உருவாகிறது.
(III) பினை கீட்டோனுரியா என்பது ஆட்டோசோமல் ஒடுங்கு ஜீன் நோய்
(IV) சிக்கில் செல் அனீமியா என்பது X இணை ஒடுங்கு ஜீன் நோயாகும்.
a) II மற்றும் IV சரி b) I, III மற்றும் IV சரி c) I, II மற்றும் III சரி d) I மற்றும் IV சரி

118. ஸ்கேலோ வெஸ்டிபியூலை, ஸ்கேலோ மீடியாவிலிருந்து ______படலம் பிரிக்கிறது.
a) யூஸ்டேஷியன் குழல் b) ரெய்ஸ்னர்ஸ் c) பேசிலார் d) காக்லியா

119. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி.
கூற்று(A): ஆக்ஸிஜனின் முதன்மை செயலியல் சம்பந்தப்பட்ட பணியானது தாவரத்தின் தண்டுப் பகுதியில் உள்ள செல்களை நீட்சியடையத் தூண்டுகிறது.
காரணம் (R): ஆக்ஸிஜனானது மொட்டுகளில் ஓய்வு நிலையை மீளச் செய்கிறது.
கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
a) (A) ம் (R) ம் சரி, (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
b) (A) ம் (R) ம் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல
c) (A) சரி, ஆனால் (R) தவறு d) (A) தவறு, ஆனால் (R) சரி

120. வாயுக்களால் வெளியேற்றப்படும் அழுத்தம் இவ்வாறு அழைக்கலாம்.
a) துடிப்பு அழுத்தம் b) பகுதியழுத்தம் c) வளிமண்டல அழுத்தம்
d) இரத்த அழுத்தம்

121. கீழ்க்கண்டவற்றுள் வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதிக்கு சார்பானது எது?
a) மிகக்குறைந்த அளவு ஆற்றல் உயிரிஎடையாக சேமிக்கப்படுகிறது.
b) ஆற்றல் சிதைக்கப்பட்டு ஒளியாக இழக்கப்படுகிறது
c) வெப்பம் சிதைக்கப்பட்டு வளர்சிதைமாற்றத்தின் போது இழக்கப்படுகிறது.
d) ஆற்றல் சிதைக்கப்பட்டு வெப்பமாக பெறப்படுகிறது.

122. தன் இடத்தை மாற்றிக் கொள்ளக் கூடிய DNA ________ எனப்படும்.
a) இண்ட்ரான் b) டிரான்ஸ்போசான் c) எக்ஸான் d) ரெக்கான்

123. குறைவான உற்பத்திறன் காணப்படும் சூழல்மண்டலம்
a) கடல் b) புல்வெளி c) காடுகள் d) வனாந்திர புல்வெளி

124. நுரையீரல்கள் மற்றும் எலும்புகளைப் பாதிக்கும் நோய்
a) எம்ஃபைசீமா b) காசநோய் c) நிமோனியா d) ஆஸ்துமா

125. மைட்ரல் வால்வு காணப்படும் இடைப்பட்ட பகுதி
a) வலது ஏட்ரியம் மற்றும் வலது வெண்ட்ரிக்கிள்
b) இடது ஏட்ரியம் மற்றும் இடது வெண்ட்ரிக்கிள்
c) வலது மற்றும் இடது வெண்ட்ரிக்கிள்
d) இடது வெண்ட்ரிக்கிள் மற்றும் அயோர்டோ

126. மெதுவான மற்றும் பஞ்சு போன்ற தோல் அமைப்பு உடல் எடை மற்றும் உடல் நரம்புகளை சுற்றியிருப்பது.
a) செவுள்மூடி b) தோல் மடிப்பு c) ஓடு d) இவற்றில் ஏதுமில்லை

127. ஒரு பாரன்கைமா செல் அனைத்துப் பணிகளையும் செய்கின்றது இது ஒன்றைத் தவிர
a) ஒளிச்சேர்க்கை b) இலைக்காம்பினை தாங்குதல் c) சேமிப்பு d) சுரத்தல்

128. கால்வின் சுழற்சியில் ஒரு $CO_2$ மூலக்கூறு நிலைநிறுதத்தின் போது செலவிடப்படும்
a) 1 b) 2 c) 3 d) 4

129. இணைக்கவும்.

| தொகுதி I | தொகுதி II |
|---|---|
| i)இஞ்சி | a) ஆப்செட் |
| ii) நீர் ஹையாசிந்த் | b)ரன்னர் (ஒடு தண்டு) |
| iii) ஆக்ஸாலிஸ் | c) பல்பில் |
| iv) அகேவ் | d) ரைசோம் |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

a) (i)-d, (ii)-c, (iii)-b, (iv)-a b) (i)-c, (ii)-d, (iii)-b, (iv)-a c) (i)-d, (ii)-a, (iii)-b, (iv)-c
d) (i)-b, (ii)-c, (iii)-d, (iv)-a

130. இவற்றில் எது மெண்டலியன் நோய் இல்லை?
a) நிறக் குருடு b) சிஸ்டிக் பைப்ரோசிஸ் c) நிக்டலோபிய
d) பினைல் கீட்டோநியூரியா

131. மனித எலும்பு கூட்டில் எத்தனை எலும்புகள் உள்ளது?
a) 206 b) 180 c) 220 d) 250

132. கிளைக்கோகேலிக்ஸ் இங்கு உருவாகிறது
a) செல்சுவர் b) செல்சவ்வு c) சைட்டோபிளாசம் d) உட்கரு

133. ரெஸீம் வகை மஞ்சரி, ஸைம் வகை மஞ்சரி ஆகியவற்றில் மலர்ச்சி முறைகள்
a) முறையே மைய நோக்கிய முறையும் மைய விலகு முறையும்
b) இரண்டும் மைய நோக்கிய முறைகள்
c) முறையே மைய விலகு முறையும் மைய நோக்கிய முறையும்
d) இரண்டும் மைய விலகு முறைகள்

134. சரியான ஜோடியை தேர்ந்தெடு
a)
புரோஜெஸ்டிரான் -கார்ப்பஸ் லியூட்டியம், பெண்களில் இரண்டாம் பாலுறுப்புகளில் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை தூண்டுதல்
b)
ஏட்ரியல் நாட்ர்யூரெடிக் காரணி-வெண்ட்ரிகுலார் சுவரால் இரத்த அழுத்தம் அதிகமாகிறது
c) ஆக்சிடடோசின் -பின் பிட்யூட்டரி,பால் சுரப்பிகளின் வளர்ச்சியை பராமரித்தல்
d) மெலோடோனின்-பீனியல் சுரப்பி, தூங்கி எழும் சுழற்சியை பராமரித்தல்

135. வேர்முடிச்சுகள் காணப்படும் தாவரக் குடும்பம்
a) லில்லியேசியீ b) சொலானேசியீ c) ஃபேபேசியி d) மால்வேசியீ

136. நியூக்ளியோசைடுவை நீராற்பகுக்கும் போது கிடைக்காதது
a) சர்க்கரை b) பாஸ்போரிக் அமிலம் c) நைட்ரஜன் காரம்
d) சர்க்கரையும் நைட்ரஜன் காரமும்

137. 'A' இரத்த வகை கொண்ட ஒரு நபர் கீழ்கண்டவற்றுள் எவ்வகையை தானமாக பெறலாம்?
a) A வகை b) O வகை c) A வகை மற்றும் O வகை d) B மற்றும் AB வகை

138. கீழ்கண்டவற்றுள் தவறானது
a)
பெண் கரப்பான் பூச்சி 9-10 முட்டைக்கூடு உற்பத்தி செய்யும்.ஒவ்வொன்றும் 14-16 முட்டைகளை இடும்
b)
கரப்பான் பூச்சியின் வளர்ச்சி பாராமெட்டாபோலஸ் வளர்ச்சி நிம்ப எனப்படும் படி நிலைகளில் நடைபெறும்
c) முதிர்ந்த கரப்பான் பூச்சியாக மாறும் வரை 9 முறை தோலுரித்தல் நடைபெறும்
d)
கடைசி நிம்ப படிநிலைக்கும் பின் பூச்சியில் இறக்கை பட்டைகள் உள்ளன.ஆனால் முதிர்ந்த கரப்பான் பூச்சியில் மட்டுமே இறக்கைகள் காணப்படும்

139. கழிமுக நீர் மீன் எது?
a) இந்திய மாக்ரல்கள் b) சார்டைன்கள் c) பெர்ல் ஸ்பாட்டுகள்
d) பாம்ஃப்ரட்டுகள்

140. பால்மியானி வளையங்களில் நடைபெறுவது
a) ஆர்.என்.ஏ மற்றும் புரத உருவாக்கம் b) லிப்பிடு உருவாக்கம்
c) நியூக்ளியோடைடு உருவாக்கம் d) பாலிசாக்கரைடு உருவாக்கம்

141. மொழிபெயர்தலின் சரியான நிகழ்வு என்பது?

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

a) தொடக்கம் → விரிவாக்கம் → செயல்பாடு → முடிவு
b) விரிவாக்கம் → தொடக்கம் → செயல்பாடு → முடிவு
c) தொடக்கம் → செயல்பாடு → விரிவாக்கம் → முடிவு
d) செயல்பாடு → தொடக்கம் → விரிவாக்கம் → முடிவு

142. நாயிலிருந்து வரும் ஹைடாடிக் நோய், ரேபிஸ் ஆகியவை முறையே எந்த வகை சுனோசிஸ் வியாதிகளுக்கு எடுத்துக்காட்டுகள்
a) புழுக்களால், வைரசால் வருபவை
b) ஒரு செல் உயிரியல், புழுக்களால் வருபவை
c) ஒரு செல் உயிரியால், வைரசால் வருபவை
d) வைரசால், புழுக்களால் வருபவை

143. விரும்பத்தக்க ஜீன் (மரபணு) குளோனிங்கிற்காக இணைக்கப்பட்டுள்ள DNA மூலக்கூறு அழைக்கப்படுவது
a) கடத்தி(வெக்டர்) b) வளர்ப்பு அச்சு இழை (டெம்பிளேட்) c) கேரியர்
d) மாற்றியமைப்பவர்

144. அரக்னாய்டு படலத்திற்கும் டியூராமேட்டருக்கும் இடையேயுள்ள குறுகிய இடைவெளிக்கு ______ என்று பெயர்.
a) டியூராமேட்டர் கீழ் இடைவெளி b) அரக்னாய்டு கீழ் இடைவெளி
c) அறிவின் அமர்விடம் d) புறணி

145. ஒரு நரம்பிழையின் தொடக்கம் மற்றும் இன்னொரு நரம்பிழையின் முடிவின் இடையிலுள்ள குறுகிய இடைவெளி இவ்வாறு அழைக்கப்படும்.
a) சினாப்ஸ் b) சினாப்டிக் பள்ளம் c) ரேன்வியரின் கணுக்கள் d) பான்ஸ்

146. குளிர்ந்த காலநிலையில் வாழும் உயிரினங்கள் குறுகிய தாங்குறிலைகள் கொண்டுள்ளன. இது அழைக்கப்படுவது
a) பெர்க்மானின் விதி b) ஆலனின் விதி c) லீபெக் விதி d) இவையன்று

147. வளர்ச்சியுற்ற பெண்களில், அண்ட சுரப்பு வளர்ச்சி மற்றும் அண்ட அணு வெளியேற்றம் ஆகியவற்றை தூண்டுவது எது?
a) MSH b) TSH c) LH d) FSH

148. மைய நோக்கிய மலர்ச்சி முறை காணப்படும் மஞ்சரியின் பெயர் என்ன?
a) ரெஸீம் வகை b) சைம் வகை c) கலப்பு வகை d) சிறப்பு வகை

149. மெண்டல் சோதனை செய்ய எடுத்துக் கொண்ட பட்டாணித் தாவரம்
a) லத்தைரஸ் ஓடெரேட்டஸ் b) பைசம் சட்டைவம்
c) ஈனோதீரா லாமார்க்கியானா d) டாலிகாஸ் லாப்லாப்

150. பின்வரும் கற்றுகளில் எவை சரி
(அ) சல்கஸ்கள் பெருமூளைப் புறணியில் உள்ள கருக்கங்களுக்கு இடையில் உள்ள பள்ளங்கள் ஆகும்
(ஆ)சல்கஸ்கள் என்பது பெருமூளைப் புறணியில் உள்ள மேடுகளாகும்
(இ) சல்கஸ்கள் மூளைத் தண்டின் நடுப்பகுதி ஆகும்
a) இ மட்டும் b) அ மட்டும் c) ஆ மற்றும் இ மட்டும் d) ஆ மட்டும்

151. அதிக கிளைகளுடைய மூளை நரம்பு
a) செவி நரம்பு b) முக்கிளை நரம்பு c) வேகஸ் நரம்பு d) முக நரம்பு

152. கருப்பையின் உட்புறமுள்ள கிலான்டுலார் மாற்றும் வாஸ்குலார் அடுக்கு
a) பெரிமெட்ரியம் b) மயோமெட்ரியம் c) என்டோமெட்ரியம் d) உள் os

153. உயிரி மரபு விதி என்பது?
a) வான் ஹெல் மான்ட் b) வான் பீர் c) எர்னஸ்ட் ஹீக்கெல் d) லூயிஸ் பாஸ்டர்

154. ______கொண்ட என்டோபிளாச வலையும் உள்ளது.
a) சைட்டோபிளாசம் b) நிஸ்ஸல் துகள்கள் c) ஆக்ஸான்
d) இயக்கு நியூரான்கள்

155. மனித மூளையில் டையன் செஃபயான் தரைப் பகுதியில் துவங்கி ஹைபோபைசிஸ் சுரப்பியை முனையில் தாங்கும் புனல் போன்ற பகுதி எது?

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

a) ஹைபோதலாமஸ் b) பார்வை நரம்புக் குறுக்கமைவு
c) கார்பஸ் ஸ்ட்ரயேட்டம் d) இன்ஃபன்டிபுலம்

156. குழல்போன்ற ________ பகுதி எலும்பின் நீள் அச்சினை உருவாக்குகிறது.
a) டயாஃபைசிஸ் b) எபிஃபைசிஸ் c) மெடாஃபைசிஸ் d) பெரியாஸ்டியம்

157. புரதங்கள் என்பவை
a) பாலிபெப்டைடுகள் b) பலபடி அமிலங்கள் c) பலபடி ஃபீனால்
d) பாலி எஸ்டர்கள்

158. குறுக்கேற்றத்தோடு தொடர்புடைய நொதி
a) லைகேஸ் b) அகோனிட்டேஸ் c) லிப்போஸ் d) ரிகாம்பினேஸ்

159. விழிலென்சில் உள்ள புரதங்களில் ஏற்படும் மாற்றத்தால் லென்சானது ஒளி ஊடுருவும் தன்மையை இழந்து இந்நிலை ஏற்படுகிறது.
a) கண்புரை b) ஹைப்பர் மெட்ரோப்பிய -தூரப்பார்வை
c) பிரஸ்பையோபியா-வெள்ளையெழுத்து d) அஸ்டிக்மாட்டிசம்

160. கீழ்வருவனவற்றுள் எந்த ஹார்மோன் பிட்யூட்டரி சுரப்பியின் தாக்கத்தினால் சுரப்பது இல்லை?
a) தைராக்ஸின் b) இன்சுலின் c) ஈஸ்ட்ரோஜன் d) குளுக்கோகர்ட்டிகாய்டுகள்

161. இந்த _______ பல அயனிக் கால்வாய்களைத் திறக்கிறது.
a) மைய நரம்பு மண்டலம் b) இயக்க முனைத்தட்டு c) அசிட்டைல் கோலைன்
d) செயல்நிலை மின்னழுத்தம்

162. மனித மூளையின் எப்பகுதி உடல் வெப்பநிலை கட்டுப்பாட்டுடன் தொடர்புடையது?
a) சிறுமூளை b) பெருமூளை c) முகுளம் d) ஹைப்போதலாமஸ்

163. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது கூட்டு வாழ்க்கையின் மூலம் நைட்ரஜனை நிலைப்படுத்தும்?
a) அசோலா b) குளோமஸ் c) அசிட்டோ பேக்டர் d) ப்ராங்கியா

164. _____ சேகரிப்பு நாளம் என்னும் நீண்ட குழலில் திறக்கிறது.
a) சிறுநீரக நுண்குடல் b) பௌமானின் கிண்ணம் c) வடித்திரவம்
d) ரீனல் கார்பசல்

165. நுனி ஆதிக்கத்தை உருவாக்குவது
a) ஆக்ஸின் b) ஜிப்ரலின் c) கைனடின் d) ABA

166. சிறுகுடலில் செயல் மிகுகடத்தல் நிகழ்ச்சி மூலம் எது உட்கிரகிக்கப்படுகின்றது.
a) குளுக்கோஸ் b) அமினோ அமிலங்கள் c) சோடியம்அயனிகள்
d) மேற்கூறிய அனைத்தும்

167. இரத்தத்தின் pH I ஒழுங்கப்படுத்த _____ கள் மீள உறிஞ்சப்படுகிறது.
a) பைகார்பனேட் b) செயல்மிகு கடத்தல்
c) நீரை ஊடுருவ அனுமதிக்கும் கால்வாய்கள் d) அண்மைய சுருண்ட நுண்குழல்

168. இதயத்துடிப்பைத் துவங்குவது
a) இதயத்தசைகள் b) சைனு ஆரிக்குலால் கணு
c) ஆரிக்குலோ வென்ட்ரிக்குலார் கணு d) ஹிஸ்ஸின் கற்றை

169. கீழ்க்கண்டவற்றுள் எவற்றிலிருந்து டெஸ்டோஸ்டீரான் சுரக்கும்?
a) லீடிக் செல்கள் b) செர்டோலி செல்கள் c) பாலிக்கிள் செல்கள்
d) விரைச்சிதைவு செல்கள்

170. இரட்டைக் கருவுறுதலில் நடைபெறும் இணைவுகள்
a) இரண்டு அண்டங்கள்
b)
இரண்டு அண்டங்கள் மற்றும் துருவ நியூக்ளியஸ்கள் மகரந்தத்துகள் நியூக்ளியசுடன்

WHATSAPP 8608208308 www.Padasalai.Net

c) ஒரு ஆண்கேமிட் அண்டத்துடனும் மற்றொன்று சினர்ஜிட் உடனும்
d) ஒரு ஆண்கேமிட் அண்டத்துடனும் மற்றொன்று இரண்டாம் நிலை நியூக்ளியசுடனும்

171. இவை உணர்ச்சி நியூரானிலிருந்து இயக்கு நியூரான்களுக்கு தூண்டல்களை மாற்றுகின்றன.
a) இடைநியூரான்கள் b) இயக்கு நியூரான்கள்
c) நிபந்தனையற்ற அனிச்சைசெயல் d) நிபந்தனை அனிச்சை செயல்

172. இரண்டு உயிரினங்கள் ஒரே வாழுமிடம் /நிச் -ல் நீண்டகாலம் வாழ இயலாது எனும் விதி
a) ஆலனின் விதி b) பெர்க்மானின் விதி c) காஸ் கொள்கை d) இவையன்று

173. ஆஞ்சியோஸ்பெர்ம்களின் ஆண்கேமிட்டோஃபைட் உதிர்க்கப்படும் நிலை
a) நான்கு செல்களுடன் b) மூன்று செல்களுடன் c) மைக்ரோஸ்போர் தாய்செல்
d) மகரந்தப் பை

174. பின்வருவனவற்றுள் சரியாகப் பொருந்தாதது?
a) நாளமுள்ள சுரப்பி - செபேஷியஸ் b) நாளமில்லா சுரப்பி - தைராய்டு
c) நாளமில்லா சுரப்பி - பால் சுரப்பி d) நாளமில்லா சுரப்பி - வியர்வை சுரப்பி

175. சுவாசத்தின்போது கீழ்க்கண்ட எந்த நிகழ்ச்சியில் பைருவிக் அமிலம் தோன்றுகிறது?
a) TCA சுழற்சி b) கிரப்ஸ் சுழற்சி c) கிளைகாலிஸ் d) எதுவுமில்லை

176. பொருத்துக: செல்பிரிதல் வகைகளை, அது நடைபெறும் செல்களோடு பொருத்து.

| | **செல் பகுப்பு** | **நடைபெறும் செல்கள்** |
|---|---|---|
| I | குன்றல் பகுப்பு | a. தண்டு, வேர் நுனியில் |
| II | நேர்முகப் பகுப்பு | b. விலங்குகளின் விந்தகம் அண்டகம் |
| III | சமநிலை பகுப்பு | c. பாலூட்டியின் குருத்தெலும்பு |

a) I-a, II-b, III-c b) I-b, II-c, III-a c) I-c, II-b, III-a d) I-c, II-a, III-b

177. தாவரங்களில் அனைத்து உயிர்ச் செயல்களுக்கும் தலைவன் என்று கருதப்படுவது
a) சுவாசித்தல் b) ஒளிச்சேர்க்கை c) நீராவிப்போக்கு d) மேற்கண்ட ஏதுமில்லை

178. கீழ்கண்ட நோய்களை நிவிர் எவ்வாறு குறிப்பிடுவீர்? - கபோசிஸ் சார்கோமா , நிமோசைடீஸ் காரினி ,நிமோனியா , லுகோபிளக்கியா
a) பரவும் நோய்த் தொற்றுகள் b) சந்தர்ப்ப நோய்த் தொற்றுகள்
c) வயிற்றுப் போக்கு நோய்கள் d) ஆட்டோ இம்யூண் நோய்கள்

179. கழிவுநீரில் மிதக்கும் மற்றும் கரைக்கப்பட்டிருக்கும் திடப்பொருள்களை வடிகட்டுதல் மற்றும் படிமப் படுத்துதல் முறை மூலம் பிரித்தெடுக்கும் முறை ஒரு பகுதியான
a) முதல் நிலை சுத்திகரிப்பு b) இரண்டாம் நிலை சுத்திகரிப்பு
c) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு d) உயிரியல் முறை சுத்திகரிப்பு

180. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை.
(i)மரபுப் பொறியியலில் உருவாக்கப்பட்ட லிம்போசைட்டுகள் அழிவற்றவை அல்ல
(ii) ரெட்ரோ வைரஸ் வழியாக ADA மற்றும் c DNA லிம்போசைட்டுகளினுள் செலுத்தப்படுகின்றன
(iii)ADA உருவாக்கும் செல்களை எலும்பு மஜ்ஜையிலிருந்து தனிமைப்படுத்தி,செல்களினுள் முன்கருநிலையில் செலுத்தினால் இந்நோயை முழுமையாக குணமாக்கலாம்.
a) (i)மற்றும்(ii)சரியானது b) (ii)மற்றும்(iii)சரியானது c) (i)மற்றும்(iii)சரியானது
d) (i)(ii)மற்றும்(iii)சரியானது

181. நோயாளியின் கைதமணியிலிருந்து எடுக்கப்படும் இரத்தத்துடன் ஹிப்பாரின் போன்ற இரத்த உறைவு எதிர்பொருள் சேர்த்து ________ செலுத்தப்படுகிறது.
a) இரத்த ஊடுபகுப்பு b) ஊடுபகுப்புக் கருவி c) சிறுநீரக மாற்று
d) கிளாமருலார் வடிக்கட்டுதல்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

182. தாவர வளர்ச்சிப் பொருள் 6-ஃபர் ஃப்யூரைல் அமினோபியூரின் ஒரு
a) கைனட்டின் b) ஆக்ஸின் c) ஜிப்பரல்லின் d) அப்ஸிசிக் அமிலம்

183. செல்சுவாசத்திற்குத் தேவையான மஞ்சள் நிற ஒளி உணர் நிறமி எது?
a) தையமின் b) ரிபோஃபிளேவின் c) நியோசின் d) பைரிடாக்ஸின்

184. "பல்லுருவமைப்பிற்கு" ஒரு சிறந்த எடுத்துக்காட்டு
a) திடீர் மாற்றம் b) SCID
c) கதிர் அரிவாள் வடிவ இரத்த சிவப்புச் செல் இரத்தச்சோகை
d) ஹன்டிங்டன் கொரிய

185. போரின்கள் எனும் புரதங்கள் இதன் சவ்வில் காணபடுகின்றன.
a) லைசோசோம் b) உட்கரு c) கோல்கை உடலம் d) மைட்டோகாண்ட்ரியா

186. நார்களுடன், கன நடுமுறை காணப்படும் தாவரம்
a) மாங்கனி b) தேங்காய் c) தக்காளி d) பட்டாணி

187. படியெடுத்தலுக்கு RNA பாலிமெரேஸ் II முக்கியமானது
a) m RNA வின் முன்னோடி b) sn RNA c) t RNA d) r RNA

188. கூட்டிணைவுக் கோட்பாடு இவ்வாறு அழைக்கப்படும்.
a) வேர் அழுத்தக் கோட்பாடு b) இழுவிசை கோட்பாடு c) நீர்போக்கு
d) நீராவிப்போக்கு

189. பிளாஸ்மோடியத்தின் நகரும் திறனுள்ள சைகோட் காணப்படுவது
a) மனித RBC -யில் b) மனித ஈரலில் c) பெண் அனாபிலிசின் உணவுக் குழலில்
d) அனாபிலிசின் உமிழ்நீர் சுரப்பிகளில்

190. முதன்மை நிணநீர் உறுப்பாக கருதப்படும் சுரப்பி எது?
a) தைராய்டு சுரப்பி b) அட்ரீனல் சுரப்பி c) தைமஸ் சுரப்பி d) பிட்யூட்டரி சுரப்பி

191. தாவரங்களின் தண்டு திடீரென நீட்சியடைந்து மலர்களைத் தோற்றுவிப்பது அழைக்கப்படுவது
a) போல்டிங் b) நுனி ஆதிக்கம் c) ரிச்மான்ட் லாங்க் விளைவு
d) பக்கானே நோய்

192. பயன்தரும் பாக்டீரியாக்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
a) நோயூக்கி பாக்டீரியா b) புரோபயோட்டிக் c) சயனோ பாக்டீரியா
d) பிளாஸ்மிட்

193. நியூரோஜெனிசிஸ், நோட்டோஜெனிசிஸ் மற்றும் மீசோஜெனிஸ் உள்ளடக்கிய நிகழ்ச்சி
a) கேஸ்ட்ருலா ஆக்கம் b) பிளவிப் பெருகல் c) கருவுருதல் d) குழலாக்கம்

194. ஆகிஸின் கடத்தப்படுவது
a) துருவ முறை b) பரவுதல் முறை c) சைலம் வழியாக
d) ஃபுளோயம் வழியாக

195. தசைகளை உருவாக்கும் அடுக்கு
a) புறப்படை b) நடுப்படை c) அகப்படை d) நரம்பு புறப்படை

196. இலைகள் முட்களாக உருமாறியிருப்பது
a) இலவு b) ஒப்பன்ஷியா c) பட்டாணி d) வெங்காயம்

197. இருபெருமூளை அரைக்கோளங்களையும் ________ என்னும் நரம்பிழைத்தொகுப்பு இணைத்துள்ளது.
a) பிளவு b) கார்ப்பஸ் கலோசம் c) உணர்ச்சிபரப்பு d) இயக்கு பரப்பு

198. தொடை எலும்பின் தலைப்பகுதி இணைந்துள்ள இடுப்பு வளைய பொருந்துக்குழி எந்த எலும்புகளின் இணைபப்பால் உருவானது?
a) இஸ்கியம் மற்றும் பியூபிஸ் b) இலியம் மற்றும் பியூபிஸ்
c) இலியம் மற்றும் இஸ்கியம் d) A மற்றும் B

199. மனிதனில் காணப்படும் முக்கிய கனிமச் கார்டிகாய்டு ஹார்மோன் எது?
a) அல்டோஸ்டிரான் b) கார்டிசால் c) டெஸ்டோஸ்டிரோன் d) ஈஸ்ட்டிரோஜன்

200. இருவித்திலை தாவர இலையின் வாஸ்குலார் கற்றைகள்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

a) திறந்தவை, ஒருங்கமைந்தவை b) ஒருங்கமைந்தவை, மூடியவை
c) மூடியவை, ஆரப்போக்கு அமைவு d) ஆரப்போக்கு அமைவு, திறந்தவை

WHATSAPP 8056206308
www.Padasalai.Net

**kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com**